**கூட்டுறவு மிகை நிதியம்  - 2022**
**-------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் என்னால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயமொன்று வெளியிடப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொததமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிதியத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கூட்டுறவு செயலில் கடன் வட்டி வருமானமாக ரூபா 32,740,634 தொகை காட்டப்பட்டிருந்த போதும், அட்டவணையில் வட்டி வருமானங்களின் கூட்டுத் தொகை ரூபா 33,140,634 ஆனதில் வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானத்தில் ரூபா 400,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நடைமுறை ஆண்டினுள் சீராக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக. | இணக்கஞ் செய்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 391,781 கூடுதலாக காட்டப்பட்ட காரணத்தால் ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்யடி வட்டி வருமானம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி கணக்கிடும் போது நடைமுறை ஆண்டிற்குரிய நாள் எண்ணிக்கை தவறுதலாக குறிக்கப்பட்ட காரணத்தால் இந் நிலைமை எழுந்துள்ளது. 2023 ஆண்டின் வட்டி கணக்கிடும் போது அதனை சீராக்கி அனுப்ப குறித்துக் கொண்டதாக. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை ரூபா | தொங்கலாக இருந்த காலப்பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| தொங்கல் கணக்குகள் | 9,475,735 | 10 ஆண்டுகளிற்கும் அதிகமான | தகவல்களை தேடிக் கொள்ளும் கடினத்தின் மீது தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. | தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணசான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | பெறவேண்டிய கூட்டுறவு சங்க கடன்கள் | 590,687,825 | மீதி உறுதிப்படுத்தல் | 2022 திசெம்பர் 31 திகதிக்கு மீதியை உறுதி செய்து தருமாறு குறித்த சங்கத்திற்கு அறிவித்துள்ளதாக. | மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறவேண்டிய தொகை | 5,029,486 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர் காலத்தில் மீதி உறுதிப்பாடுகளை பெற்று சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | பெறவேண்டிய திறைசேரி கடன்கள் | 81,871,370 | மீதி உறுதிப்படுத்தல் | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | விரிவான அட்டவணைகள் | விரிவான அட்டவணைகளை சமர்ப்பிப்பதில் பிரச்சினை காணப்படுவதாக. | மீதிகளை உறுதிப்படுத்தும் உறுதிப்பாடுளை சமர்ப்பிக்க வேண்டும |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 3,871,256 | விரிவான அட்டவணைகள் | - மேற்படி - | - மேற்படி - |
| (vi) | பொது வைப்புக் கணக்கு | 7,400,772 | விரிவான அட்டவணைகள் | விரிவான அட்டவணைகளை சமர்ப்பிப்பதில் பிரச்சினை காணப்படுவதாக. | விரிவான அட்டவணைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (vii) | நிலையான வைப்பு பிணை கடன்கொடுனர் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல். | மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பிப்பதில் பிரச்சினை காணப்படுவதாக. | மீதியை உறுதி செய்து கொள்ள குறித்த நிரூபனங்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| (viii) | கலைத்தல் கணக்குகள் (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதிகள். | இம் மீதி 1990 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதி ஆகையால் தகவல்களை கண்டறிவதில் பிரச்சினை காணப்படுவதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளிற்குரிய உறுதிப்படுத்தல்களை சமர்பிக்க வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்படாத கடன் அட்டவணை பிரகாரம் 1989 ஆண்டிலிருந்து 2006 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதியத்திடமிருந்து 69 கூட்டுறவு சங்கங்களிற்கு வழங்கி இருந்த ரூபா 129,131,173 கடன் தொகையிலிருந்து 2022 சனவரி 01 திகதியன்று ரூபா 89,208,070 மீதியொன்று அறவிட வேண்டியதாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் கடன் தவணைகளாக ரூபா 198,991 மாத்திரம் கிடைத்திருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 102,110,771 தொகையான கடன் வட்டியிடமிருந்து ரூபா 13,674 ஆன தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. | செயற்படாத கடன் பதிவேட்டில் உள்ள கடன் கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து வழங்கியுள்ள மிகவும் பழைய கடனாவதுடன் தற்போது இக்கடனை அறவிட முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக. | உரியவாறு கடன் தவணைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,721,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது நீண்டகாலமாக நிலவி வரும் மீதி ஒன்றாகும். இம் மீதி தொடர்பாக தீர்பனவை விரைவில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கி உள்ளதாக. | மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 507,312,785 ஆன பெற வேண்டிய செயற்பாட்டு மீதியில் மீளாய்வாண்டில் ரூபா 24,962,961 மாத்திரம் அறவிடப்பட்டு இருந்தது. இந்தக் கடன் மீதிகளின் மீது ரூபா 216,582,478 ஆன கடன் வட்டி 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த போதும் ரூபா 9,814,450 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது. இக் கடன் மீதியினுள் உள்ளடங்கும் 07 ஆண்டுகளிற்கு முன்னர் பல கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கம்பனிகளிற்கு வழங்கியிருந்த ரூபா 125,271,190 ஆன கடன் மீதியிலிருந்து எவ்வித தொகையும் அறவிட மீளாய்வாண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | செயற்பாட்டு கடன் பதிவேட்டினுள் காணப்படும் அநேகமான கடன் 2018 ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட கடனாகும். 2022.01.01 திகதியன்று ரூபா 507,312,785 ஆன தொகை எதிர்வரும் ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய கடன் தவணைகளும் காணப்படுகின்றன. 2018 ஆண்டிற்கு முன்னர் வழங்கிய கடனை அறவிட சட்ட மா அதிபரின் ஆலோசனை பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, ஏனைய கடன்களை அறவிட தற்போது பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மற்றும் உரிய மாகாண கூட்டுறவு ஆணையாளர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக. | கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கட்டிடங்கள் மூலப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு 2013 மே 08 திகதி வழங்கியிருந்த ரூபா 75,000,000 ஆன கடன் தொகையிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 62,091,372 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதும் அதற்காக அறவிட வேண்டிய வட்டி ரூபா 75,500,840 ஆனது. 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் கடன் தொகை மற்றும் வட்டியின் கூட்டுத் தொகை ரூபா 137,592,212 தொகை 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிடப்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை கட்டிடங்கள் மூலப்பொருள் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அறிவிடுவதற்காக அமைச்சரவை பத்திரமொன்று, இராஜாங்க அமைச்சினூடாக குறித்த அமைச்சரவை பத்திரத்தை தயாரித்து 2022.03.28 திகதி அமைச்சரவை அமைச்சிற்கு அனுப்பப்படட்தாக தகவல் அறிக்கையிடப்படுவதாக. | இது தொடர்பாக பின்னூட்டல் நடவடிக்கை மேற்கொண்டு கடன் தொகையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை கூற்றில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் காட்டியிருந்த மிகை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,017,551 ஆன மீதியை 2009 ஆண்டு முதல் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை தேடிக் கொள்வதன் கடினத்தின் மீது தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. எவ்வாறாயினும் இந்த மீதி தொடர்பான தீர்பனவை துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக. | செலுத்த வேண்டிய தொகையை தீர்க்க நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பொறுப்பின் கீழ் 2009 ஆண்டு முதல் நிலவி வரும் மேலதிக அறவீடு ரூபா 196,201 தொகை மற்றும் 2018 ஆண்டு முதல் நிலவி வரும் கணக்கு மாற்றல் ரூபா 100,000 ஆன மீதியொன்றை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை தேடிக் கொள்வதன் கடினத்தின் மீது தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. எவ்வாறாயினும் இந்த மீதி தொடர்பான தீர்பனவை துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழ்ங்கியுள்ளதாக. | செலுத்த வேண்டிய தொகையை தீர்க்க நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 230,070,179 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 105,727,365 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 124,342,814 தொகையான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு வட்டி வருமானம் ரூபா 152,039,040 ஆல் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து 2010, 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் வழங்கியிருந்த கடன் தொகைகளிற்குரிய வருடாந்த கடன் வட்டி மற்றும் கடன் தவணையை உடன்படிக்கை பிரகாரம் அறவிட முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காததால் மீளாய்வாண்டில் ரூபா 48,664,475 ஆன வட்டித் தொகை இலாபத்திலிருந்து பதிவழிக்கப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் கடனை மறுசீரமைத்து வட்டியை பதிவழித்த பின்னர் உரியவாறு கடன் மற்றும் தவணைகள் செலுத்தப்படும். | உடன்படிக்கை பிரகாரம் கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுறவு சங்கங்களிற்கு மாத்திரம் கடன் வழங்க முடியுமென சட்டத்தில் ஏற்பாடு இருந்த போதும் அதற்கு முரணாக கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கு 2012 ஆண்டில் ஏப்ரல் 05 திகதி ரூபா 13,969,497 ஆன வட்டியின்றிய கடன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக குறித்த நிறுவனத்தை அறிவூட்டியுள்ள போதும் இது வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் கடன் வழங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 2006 ஆண்டில் வழங்கிய ரூபா 19.5 மில்லியனான கடன் மீதி செயற்படாத கடன் மீதியாக காணப்படும் போது வழங்கிய கடனை அறவிடாது கூட்டுறவு மிகை நிதியத்தினால் ரூபா 7.5 மில்லியனான கடன் தொகையொன்றை 2022 ஆண்டில் வழங்கியிருந்தது. இவ்வாறு கடனை அறவிட்டுக் கொள்ளாது மீண்டும் கடன் வழங்கியுள்ளமை கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதாக இருந்தது. | கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு வழங்கிய கடன் செயற்படாத கடன் பதிவேட்டில் காட்டப்படுவதுடன் 2022 ஆண்டில் கடன் விடுவிக்க முன்னர் வரையறுக்கப்பட்ட விற்பனை சங்கத்தினூடாக அறவிட வேண்டிய கடனை செலுத்தி முடிவிக்குமாறு எங்களால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ரூபா 19,500,000 ஆன கடனொன்றை அச்சங்கம் பெற்றுக் கொள்ளவில்லை என உறுதி செய்து 2022.08.04 திகதி எழுத்து மூலம் எமக்கு அறிவித்துள்ளதாக. | அவ்வாறான கடன் தொகையொன்று இல்லையென குறித்த சங்கம் உறுதி செய்கின்றதெனில் மிகை நிதியத்தின் குறித்த ஆவணம் சார்ந்ததாக இவ்வாறான கடன் தொகை காணப்படுவது எவ்வாறு என்பது தொடர்பாக புலனாய்வு ரீதியாக பரிசோதித்து குறித்த சீராக்கத்தை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | தேசிய பால் உற்பத்தியை அதிகரிக்க முன்னுரிமை வழங்கி பால் சிறப்பு விற்பனை நிலையம் ஒன்றிற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்து விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு 2007 ஆகஸ்ட் 06 திகதி ரூபா 15,587,000 ஆன வட்டியின்றிய கடன் தொகையொன்றை வழங்கி அதற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தினால் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | உடன்படிக்கையின் 7 பிரிவின் பிரகாரம் ஒவ்வொறு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாதாந்த தவணை ரூபா 65,765 தொகை செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும் 15 ஆண்டுகள் கடந்திருந்த போதும் ரூபா 737,250 தொகையை செலுத்தி இருந்ததன் பிரகாரம் 11 மாதங்கள் மாத்திரம் பணம் செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய கால எல்லையினுள் (அதாவது 20 ஆண்டுகளில்) செலுத்தி முடிவிக்கவில்லை எனில் சிறப்பு விற்பனை நிலையத்திற்கு சொந்தமான கட்டிடத்தின் உரிமையை கூட்டுறவு திணைக்களத்திற்கு உரித்தாகும் எனவும் குறிப்பிட்டிருந்த போதும் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்டம் செயற்படாமை மற்றும் சங்கங்களும் இதன் காரணமாக செயற்படாத காரணத்தால் கடன் தொகை அறவிடப்படாது உள்ளது. இது தொடர்பாக அதன் போதைய மதிப்பிற்குரிய அமைச்சருடன் சங்கத்தின் அலுவலர்கள் கலந்துரையாடியதுடன் சரியான தீர்பொன்று கிடைக்கவில்லை. காணியின் உரிமையை கூமொவி நிறுவனத்திற்கு உரியதால் கட்டிடத்தின் உரிமையை திணைக்களத்திற்கு ஒப்படைக்கவில்லையென. | கடன் உடன்படிக்கை பிரகாரம் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | உடன்படிக்கையின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் தொகை உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என விஷேடமாக பரிசோதிக்க அரச கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர் ஒருவரை நியமித்து அது தொடர்பாக பரிசோதிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக 2023 சனவரி 31 திகதியளவில் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் பொது சங்கம் செயற்படாத சங்கமொன்றாக இனங்கண்டு பதிவை | மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்காக சங்கத்தின் முன்னால் ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் அதற்காக அதிக நிறை கொடுத்ததன் மீது சங்கத்திடம் காணப்பட்ட விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதில் பிரச்சினையான நிலைமைக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அதன் காரணமாக சங்கம் செயற்பாடற்றுள்ளது. அக் காலத்தில் இருந்த சங்கத்தின் பொது முகாமையாளர் தற்போது மரணித்துள்ளார். ஊழயிர்களும் விலகிச் சென்றுள்ளனர். அதனால் சங்கம் செயற்பாடற்று பல வருடங்கள் கடந்துள்ளதால் பதிவை இறத்துச் செய்ய | உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் செயற்பட பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதில் இந்த சங்கத்திடமிருந்து அறவிட வேண்டியதாக நிலவிய ரூபா 14,849,750 தொகை அறவிட முடியாத நட்டமொன்றென அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | |
| (உ) | கூட்டுறவு மிகை நிதியத்தின் முக்கிய நோக்கமான கூட்டுறவு சங்கங்களை வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் மூலஉபாயமாக செயற்பாடற்ற கூட்டுறவு சங்கங்களின் பதிவை இறத்துச் செய்வதனை 2022 செயற் நடவடிக்கை திட்டதில் இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்பாட்டை மிகவும் முறையாக மேற்கொள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கம்பனிகளை கலைக்கும் போது பின்பற்ற வேண்டிய குறிப்பான செயற்திட்டம் பற்றி வழிகாட்டிகளை அறிமுகஞ் செய்திருக்கவில்லை. | 2023.06.01 திகதி முதல் கலைக்கும் செயற்பாடுகளிற்குரிய வழிகாட்டிக் கோவையை செய்படுத்த உள்ளதாக. | கலைக்கும் நடவடிக்கைகளுக்காக வழிகாட்டிக் கோவையை தயாரிக்க வேண்டும். |